**SENGUNTHAR**

# Daily News

SPECIAL EDITION

25th ANNIVERSARY

**26-01-2026/SEC/DN/339**

## 77 Republic Day

## 2026



## 77 Republic Day 2026



SENGUNTHAR
Daily News
SPECIAL EDITION
26-01-2026/SEC/DN/339

Republic Day 2026

## திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனங்களில் 77-வது குடியரசு தின விழா கொண்டாட்டம்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனங்களில் 26.01.2026-அன்று 77- ஆவது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஜான்சன்ஸ் திரு.T.S.நடராஜன் அவர்கள் தலைமை தாங்கினார்.. கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் பேராசிரியர் திரு.A.பாலதண்டபாணி அவர்கள் மூவர்ண கொடியை ஏற்றினார்,. பொருளாளர் M.K..தனசேகரன் அவர்கள் முன்னிலை வகித்தார். செயல் இயக்குனர் அரவிந்த்திருநாவுக்கரசு அவர்கள், செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் R.சதீஷ்குமார், செங்குந்தர் மருந்தியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் M.சுரேந்திரகுமார், செங்குந்தர் செவிலியர் கல்லூரியின் முதல்வர் நீலாவதி, அலைடு ஹெல்த் சயின்ஸ் முதல்வர் E.சௌமியா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்திய அளவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் என்.சி.சி ஏர் விங் மற்றும் ஆர்மி விங் கேடட்கள் கலந்து கொண்டு பாராட்டு சாண்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வென்றனர். மூன்றாம் ஆண்டு மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ் துறை மாணவி K.தனஸ்ரீ சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் கல்லூரியின் சார்பாக கலந்து கொண்டார். கல்லூரியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்து கொண்ட சிறந்த என் சி சி ஏர் விங் மாணவர்க்கான பரிசை இரண்டாம் ஆண்டு மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ் துறை மாணவர் V.கிஷோர் மற்றும் என் சி சி ஆர்மி விங் மாணவர்க்கான பரிசை மூன்றாம் ஆண்டு எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் துறை மாணவி S.மணிமொழி இருவருக்கும் தலா ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கி பாராட்டினார். இறுதியில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது




SENGUNTHAR Shrine 2 Success கற்க கசடற
SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS)
TIRUCHENGODE-637205,NAMAKKAL (Dt),TAMILNADU

SENGUNTHAR
# Daily News
SPECIAL EDITION
25th ANNIVERSARY
26-01-2026/SEC/DN/339

STUDENTS' CORNER
SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS)

## STUDENTS CORNER





"N.C.C. Air Wing Cadet K.DHANASR, a III-year student of the Medical Electronics Department at Sengunthar Engineering College, Tiruchengode, proudly participated in the 77th Republic Day Parade held at Marina Beach, Chennai, showcasing her courage, discipline, and patriotic spirit."




77th Republic Day celebration in Sengunthar Engineering College
(Army Wing) Cadets 50, Ex Cadets 5 Participated in this celebration

SENGUNTHAR
# Daily News
SPECIAL EDITION
25th ANNIVERSARY
26-01-2026/SEC/DN/339

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



**குறள் 702:**
ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.
**விளக்கம்:**
ஒருவன் மனத்தில் உள்ளத்தைத், தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடிய சக்தி தெய்வத்திற்கே உண்டு என்று கூறினால், அந்தத் திறமை படைத்த மனிதனையும் அத்தெய்வத்தோடு ஒப்பிடலாம்

## இலக்கணக் குறிப்பறிதல்

**உயர்பொருட்பேறு**

இழிந்த பொருளில் வழங்கி வந்த சொற்கள், காலப்போக்கில் உயர்ந்த பொருள்களைத் தருவதாகவும் மாற்றமடைந்துள்ளன. இவ்வாறு வருவனவற்றை 'உயர்பொருட்பேறு' எனக் குறிப்பிடுகின்றனர். முன்பு, கள்ளுண்டு களித்தல் என்பதைக் 'களிப்பு' என்றனர். இன்று, 'களிப்பு' என்பது, 'மனமகிழ்ச்சி' என்னும் உயர்பொருளில் வழங்குகிறது.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: சாதம் தமிழ்மொழி : சோறு